**<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>**

**<u>நாள் – 17.11.2025</u>**

**OS.122/2020**

**வா.சா.1 திருமதி.பவுனம்மாள்**

**வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**<u>4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. செல்வம் என்பவர் எனது கணவருடன் பிறந்தவர் என்றால் சரிதான். அவர் எப்போது இறந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தேதி எனக்கு தெரியவில்லை, அவர் இறந்து 15 வருடம் ஆகிறது. அவருடைய மனைவிதான் 1ம் வாதியான முருகம்மாள் என்றால் சரிதான். 2, 3 வாதிகளான செண்பகம், செல்வமணி ஆகியோர் செல்வம், முருகம்மாளின் வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படி செல்வம் 11.10.1979ல் ஒரு விடுதலைபத்திரம் எழுதி அது அரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.49/1979 என பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அது பொய்யாக சொல்கிறார்கள். மேற்படி செல்வம், 11.10.1979 லேயே சொத்தை பொறுத்து விடுதலைப்பத்திரம் எழுதி கொடுத்துள்ளதால் அவரது வாரிசுகளான 1 முதல் 3ம் வாதிகளான முருகம்மாள்,செண்பகம், செல்வமணி ஆகியோர் எந்த பாகமும் சட்டப்படி கோர இயலாது என்றால் சரியல்ல.

2. துளசியம்மாள் என்பவர் எனக்கு மாமியார் என்றால் சரிதான். எனது மாமியார் 28.09.1977–ம் தேதி அன்று தாவா சொத்தை கிரையம் வாங்கி அது அரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1789/1977 ஆக பதிவு

செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி துளசியம்மாள் கிரயம் பெற்ற ஆவணத்தை நான் படித்துப்பார்த்துள்ளேனா என்றால் இல்லை. துளசியம்மாளுக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்ட அவருடைய சொத்தை 4, 5, 6 பிரதிவாதிகளான குமரேசன், பிரகாசம், சுகுணா ஆகியோருக்கு 28.09.2017–ம் தேதி அன்று உயில்சாசனம் ஒன்றை எழுதி அது அரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.51/2017 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பொய்யானது. எனது மாமியார் இறப்பதற்கு 4 ஆண்டுகளுக்கு முன்பாகவே 4 முதல் 6 பிரதிவாதிகளான குமரேசன், பிரகாசம், சுகுணா ஆகியோருக்கு அவருக்கு பாத்தியப்பட்ட தாவாசொத்தை பதிவு செய்யப்பட்ட உயில்மூலம் எழுதி கொடுத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல.

3. எனது மாமியார் துளசியம்மாள் எந்த தேதியில் இறந்தார் என்றால் தேதி தெரியவில்லை, ஆனால் அவர் 2020ம் ஆண்டு இறந்துவிட்டார். மேற்படி துளசியம்மாள் இறந்த பிறகு தாவா சொத்துக்களை பதிவு செய்யப்பட்ட உயில்ஆவணத்தின்படி பட்டா மாற்றம் செய்ய 4, 5, 6 பிரதிவாதிகளான குமரேசன், பிரகாசம், சுகுணா விண்ணப்பம் செய்தபோது அவ்வாறு கொடுக்கக்கூடாது என்று நான் ஆட்சேபனை தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். 07.07.2020 ம் தேதி அன்று எனது வழக்கறிஞர் மூலமாக சட்ட அறிவிப்பை கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். எனக்கு படிக்க தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் வழக்கறிஞர் அறிவிப்பில் (வா.சா.ஆ.3ல்) தாவா சொத்தை எனது மாமனார், எனது மாமியார்

துளசியம்மாளுக்கு உயில் எழுதிவைத்ததாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். நாங்கள் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் பக்கம் 3ல் 28.09.1977 ம் தேதியில் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம் துளசியம்மாளுக்கு பாத்தியம் என்று சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். நாங்கள் அனுப்பியுள்ள சட்ட அறிவிப்பில் தாவா சொத்து துளசியம்மாளின் கணவர் அவருக்கு உயில்எழுதி வைத்ததாகவும், பின்னிட்டு தாக்கல் செய்த வழக்குரையில் தாவா சொத்து துளசியம்மாளுக்கு பாத்தியம் என்று முன்னுக்கு பின் முரணான சங்கதிகளை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

4. நாங்கள் கொடுத்த சட்ட அறிவிப்புக்கு 22.07.2020 ம் தேதியில் பிரதிவாதிகள் பதில் சட்டஅறிவிப்பு கொடுத்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பதில் சட்டஅறிவிப்பில் (வா.சா.ஆ.4ல் ) 28.09.2017ம் தேதியில் குமரேசன், பிரகாசம், சுகுணா ஆகியோருக்கு துளசியம்மாள் தாவா சொத்தை பொறுத்து உயில் எழுதிவைத்ததாக பதில் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான், ஆனால் அது பொய்யானது. 4, 5, 6 பிரிதிவாதிகள் பெயரில் பட்டா மாற்றம் செய்யக்கூடாது என்று நான் யார்ர் யாருக்கு மனு கொடுத்தேன் என்றால் கிராம நிர்வாக அலுவலர், வட்டாட்சியர், கலெக்டர் ஆகியோருக்கு கொடுத்தேன். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.5ன் படி சார்ஆட்சியர், வட்டாட்சியர், கிராமநிர்வாக அலுவலருக்கு அறிவிப்பு அனுப்பியதற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். துளசியம்மாள் 2017 ம் ஆண்டு சுயநினைவுடனும், திடகாத்திரமாகவும், நல்ல மனநிலையில்

இருந்து அவருக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தை 4, 5, 6 பிரதிவாதிகளான குமரேசன், பிரகாசம், சுகுணா ஆகியோருக்கு உயில்மூலம் சொத்தை கொடுத்துள்ளார், அது அரூர் சார்பதிவாளர் அலுவலகத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

5. 2017ம் ஆண்டு துளசியம்மாள் தாவா சொத்தை 4, 5, 6 பிரதிவாதிகளான குமரேசன், பிரகாசம், சுகுணா ஆகியோருக்கு உயில்எழுதி வைத்த நாள் முதல் அவர்களுடைய அனுபவத்தில் தான் தாவா சொத்து இருந்து வருகிறது என்றால் சரியல்ல. துளசியம்மாள் சுயமாக சம்பாதித்த சொத்து என்பதால் அதை பொறுத்து நான் வழக்கு தொடர எங்களுக்கு எந்தவித முகாந்திரமும் சட்டப்படி இல்லை என்றால் சரியல்ல. உண்மை சங்கதிகளை மறைத்தும், தவறான சங்கதிகளை குறிப்பிட்டும், தாவா தாக்கல் செய்துள்ளதால் நாங்கள் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2025.11.17 16:43:37 +0530